செய்தி வெளியீடு எண்: 177 நாள் : 29.03.2016

## பொதுத் (தேர்தல்கள்.3) துறை

1. வருகின்ற 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் பொதுத் தேர்தலின்போது போட்டியிடும் வேட்பாளர்கள், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி தங்கள் வேட்புமனுவுடன் உறுதிமொழிப் பத்திரம் (படிவம்–26) தாக்கல் செய்ய வேண்டும். நோட்டரி பப்ளிக் / பிரமாண ஆணையர் / முதல் வகுப்பு நடுவர் முன்னிலையில் வேட்புமனு சான்றொப்பமிடப்படவேண்டும். வேட்புமனு தாக்கல் செய்யும்போது சான்றொப்பமிடுவது ஒரு சட்டரீதியான தேவை மற்றும் பின்பற்றப்பட வேண்டியிருப்பதால், இந்தியத் தேர்தல் ஆணையம், விருப்பத்தின்பேரில் இணையதளம் (Online) மூலம் உறுதிமொழிப்பத்திரம் தாக்கல் செய்யும் வசதியை உருவாக்கியுள்ளது.

2. வேட்பாளர்கள் இணையதள மூலமாக உறுதிமொழிப்பத்திரம் தாக்கல் செய்ய விரும்பினால் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வலைதள முகவரி www.eci.nic.in–யில் "Online submission of candidate affidavits" கிளிக் செய்ய வேண்டும். வேட்பாளர்கள் முத்திரைதாளில் அச்சு எடுப்பதற்கான முறையில் வடிவமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பிரமாண ஆணையர் அல்லது முதல் வகுப்பு நடுவர் அல்லது நோட்டரி பப்ளிக் முன்னிலையில் உறுதிமொழிப்பத்திரத்தினை அதற்குரிய கட்டணத்துடன் முத்திரைத்தாளில் தேர்தல் நடத்தும்அதிகாரியிடம் (Returning Officer) உறுதிமொழி தாக்கல் செய்யப்படவேண்டும். சான்றளிக்கப்பட்ட உறுதிமொழிப்பத்திரமானது வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் மாலை 3.00 மணி வரை தாக்கல் செய்யலாம்.

3. இணையதள மூலமாக வேட்பாளர்களே உறுதிமொழிப்பத்திரம் தாக்கல் செய்யலாம். அவ்வாறு வேட்புமனு தாக்கல் செய்யும்போது வேட்புமனுவை சரியாக பூர்த்தி செய்வதற்கு தேவையான ஆன் லைன் உதவி கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட உறுதிமொழிப்பத்திரத்தை அச்சு எடுத்துக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இணையதள மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய நெடும்பத்திகள் (Columns) பூர்த்தி செய்யப்படாமல் இருப்பின் அவ்விண்ணப்பங்களை இணையதளம் எற்றக்கொள்ளாது. இதன்மூலம் நெடும்பத்திகள் (Columns) சரியாக பூர்த்தி செய்யப்படாததால் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதை தவிர்க்கலாம்.

4. தற்பொழுது இந்தியத் தேர்தல் ஆணையமானது உறுதிமொழிப்பத்திரத்தினை ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் இணையதளத்தில் சமர்ப்பிக்கலாம் என தெரிவித்துள்ளது.

5. இணையதளத்தின் மூலம் உறுதிமொழிப்பத்திரத்தினை தாக்கல் செய்வதில் வேட்பாளருக்கு கூடுதல் செலவு எதுவுமில்லை. இணையதளத்தின் மூலம் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழிப்பத்திரத்தினை வேட்பாளர் அச்சு எடுத்த பின்பும், பார்த்துக் கொள்ளலாம். தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் (Returning Officer) சான்றொப்பமிட்ட உறுதிமொழிப்பத்திரம் தாக்கல் செய்யும் முன்பு வரை, இணையதள பதிவில் மாற்றங்கள் செய்யலாம்.

6. இந்த இணையதள சேவைகள், தேசிய தகவல் மையம் (NIC) மற்றும் தேசிய செக்யூரிட்டி டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) ஆகியவற்றினால் வழங்கப்படுகிறது. நிர்வாக தொடர்பான விளக்கங்களுக்கு supportaffidavit@eci.gov.in என்ற மின்னஞ்சல் முகவரியையும் தொழில்நுட்பம் தொடர்பான விளக்கங்களுக்கு 011–23052043 என்ற தொலைபேசி எண்ணினையும் தொடர்புக் கொள்ளலாம், என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**